சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.14.07.2025.
OS.No. 244/2018
DW1 : ராஜா சுரேஷ் (வயது 53 ) த/பெ. பொன்னு முத்தையன்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

1,2 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி தானாகவே முடிக்கப்பட்டது.

**<u>வாதி தரப்பு கு.வி</u>**

எனது முதல் விசாரணை வாக்குமூல விவரங்களை யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். இந்த வழக்கில் எனது மனைவிக்காக நான் சாட்சியம் அளிக்க அனுமதி அளித்து அதிகார ஆவணம் எனது மனைவி கொடுத்துள்ளார். அவ்வாறு அதிகார ஆவணம் எதுவும் எனது மனைவி கொடுக்கவில்லை என்பதால் தான் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். வழக்கை பற்றிய முழு விவரம் எனக்கு தெரியும். பத்மா மற்றும் பவித்ரா ஆகியோரிடமிருந்து 12 ஆம் பிரதிவாதி கிரயம் வாங்கியதாக கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். பத்மா மற்றும் பவித்ரா ஆகியோர்கள் சிலம்பாயி என்பவரிடமிருந்து சொத்தினை கிரயம் வாங்கியுள்ளார்கள் என்றால் சிலம்பாயியிடமிருந்து சிவபிரகாசம் கிரயம் வாங்கி அவருடைய வாரிசுகள் என்ற கிரமப்படி பத்மா, பவித்ரா ஆகியோர்களிடமிருந்து எனது மனைவி கிரயம் பெற்றுள்ளார். சிலம்பாயியின் கணவர் பெயர் சுப்பிரமணியன் பிள்ளை. சுப்பிரமணியன் சிலம்பாயியின் மகன் பெயர் பழனியாண்டி என்றால் சரியாக தெரியாது. பழனியாண்டி அவர்களின் மகன்கள் தான் மூர்த்தி, பாலசுப்பிரமணியன், பன்னீர்செல்வம் (14 முதல் 16 பிரதிவாதிகள் ) மற்றும் 1 ஆம் வாதியின் கணவரும், 2,3 வாதிகளின் தந்தையுமான சந்திரகுமார் ஆகியோர்கள் என்றால் தெரியாது. அறிவிப்பு வந்த பிறகு தான் இவர்கள் தான் என்று எனக்கு தெரிந்தது. எனக்கு அறிவிப்பு வந்த பின்பு நானோ எனது மனைவியோ 14 முதல் 16 பிரதிவாதிகளை சென்று பார்த்தோமா என்றால் இல்லை. கிரயம் வாங்குவதற்கு முன்பு நானும் எனது மனைவியும் சொத்துக்களுக்கான மூல ஆவணங்களை பார்த்தோமா என்றால்

பார்த்தோம். அவ்வாறு விஏஓ- விடம் வாங்கியதாக கூறும் அடங்கல் ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அது போன்ற ஆவணங்கள் எதுவும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல. என்னென்ன மூல ஆவணங்களை வாங்கி பார்த்தேன் என்றால் வில்லங்க சான்று, அடங்கல், சிலம்பாயி அம்மாளிடமிருந்து சிவபிரகாசம் கிரயம் வாங்கிய பத்திரத்தையும் சிவபிரகாசத்திற்கு வாரிசுதாரர்கள் பத்மா, பவித்ரா என்பதற்கான வாரிசு மற்றும் இறப்பு சான்று மற்றம் பத்மாவிடமிருந்து பவித்ரா பெற்ற அதிகார ஆவணம் போன்ற ஆவணங்களை பார்த்தேன். நான் கூறியது போன்ற ஆவணங்கள் எதையும் நான் வாங்கி பார்க்கவில்லை என்றும், அதனால் தான் அதற்கான ஆவணங்களை வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனதுமனைவி வாங்கிய கிரய ஆவணத்தின் சர்வே எண்.62/10சி. என்னிடம் காட்டப்படும் சா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்.62/10சி க்கு யார் பெயர் இடம்பெற்றுள்ளது என்றால் பன்னீர் செல்வம். நான் கூறுவது தவறு என்றும் சந்திரகுமார் பெயரில் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். இந்த ஆவணத்தை தற்போது தான் முதலில் பார்க்கிறேன். தாவாசொத்து சம்மந்தமான வருவாய் ஆவணங்களை ஏற்கனவே பார்த்ததாக ஒப்புக்கொண்டுவிட்டு வழக்கிற்காக சா.சா.ஆ.1 ஆவணத்தை தற்போது தான் பார்ப்பத்தாக பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சா.சா.ஆ.1 வரிசைகளில் சிட்டாவில் சர்வே எண்.62/10சி யார் பெயரில் பதிவாகியுள்ளது என்றால் பழனியாண்டி என்ற பெயர் பதிவாகியும், அதற்கு கீழே சந்திரகுமார் என்ற பெயர் சுழிக்கப்பட்டும் உள்ளது. வேறு விவரங்கள் எதுவும் இல்லை. 1 ஆம் வாதியின் கணவரும், 2,3 வாதிகளின் தகப்பனாருமான சந்திரகுமார் பெயரில் தாவா சொத்துக்கள் இருப்பதை பற்றி வருவாய் துறை ஆவணங்களை பார்த்து தெரிந்து கொண்டுதான் 1,2 பிரதிவாதிகளுடன் சேர்ந்து தாவா சொத்தை மோசடியாக கிரயம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல.எனது மனைவிக்கு எழுதி

கொடுத்த கிரய ஆவணத்தில், எழுதி கொடுத்தவர்களான பத்மா, பவித்ரா ஆகியோர்களின் தகப்பனார் சிவபிரகாசத்திற்கு கிரயம் எழுதி கொடுத்த சிலம்பாயிக்கு எவ்வாறு சொத்து பாத்தியம் என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் சிலம்பாயி அம்மாளுக்கு பூர்விகமாக சொந்தமான என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. பின்னிட்டு சாட்சி சிலம்பாயி அம்மாளுக்கு அவரது கணவரான சுப்பிரமணியபிள்ளையின் வாரிசுகிரமபடி சொத்து பாத்தியம் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்று கூறுகிறார். நான் கூறும் சுப்பிரமணியபிள்ளை மற்றும் சிலம்பாயின் வாரிசு பழனியாண்டி என்றால் அது பற்றி தெரியாது. ஆவணத்தில் அது பற்றி சொல்லவில்லை. ஒரு சொத்தை கிரயம் வாங்க வேண்டும் என்றால் வாரிசுகிரமப்படி சொத்தை விற்கும் நபரின் வாரிசு சான்று, இறந்தவரின் இறப்பு சான்று பார்த்து தான் கிரயம் வாங்கவேண்டும் என்றால் சரியல்ல. நான் யாரிடமிருந்து கிரயம் வாங்குகிறேனோ அவர் சம்மந்தப்பட்ட ஆவணங்களை மட்டும் பார்த்து வாங்கினேன் மற்ற விவரங்களை பார்த்து வாங்கவேண்டிய அவசியம் இல்லை. பத்மா, பவித்ரா ஆகியோரிடம் தாவா சொத்து குறித்து கேட்டபோது, மூர்த்தி, பாலசுப்பிரமணியன், பன்னீர்செல்வம் ஆகியோர்களிடம் பங்கு கேட்காமல் சொத்தினை கிரயம் வாங்கிய நபர்களிடம் பங்கு கேட்பதாகவும்,சொத்தின் சந்தை மதிப்பு பல மடங்கு உயர்ந்துவிட்டதால், மோசடியாக பங்கு கேட்பதாக கூறிவிட்டார்கள். எதன் அடிப்படையில் மூர்த்தி, பாலசுப்பிரமணியன், பன்னீர்செல்வம் ஆகியோர்களிடம் வாதிகள் பங்கு கேட்க வேண்டும் என்றால் வாதிகளின் தகப்பனாரின் உடன்பிறந்தவர்கள் என்ற அடிப்படையிலும், பழனியாண்டியின் வாரிசுகள் என்ற அடிப்படையிலும் அவர்களிடம் தான் வாதிகள் பங்குகேட்கவேண்டும். சிவபிரகாசம் வாங்கியதாக கூறும் அசல் கிரய ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதன் நகல் தாக்கல் செய்துள்ளேன். அந்த சொத்தை லேஅவுட் போட்டு விற்பதால் அசல் ஆவணம் தரவில்லை, நகல் ஆவணம் மட்டுமே தந்தார்கள். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 கிரய ஆவணத்தில் சிலம்பாயி அம்மாள் அவரது

கணவரான சுப்பிரமணியபிள்ளைக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு அந்த சொத்தை வாரிசுகிரமப்படி அடைந்து அதனை கிரயம் செய்து கொடுப்பதாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் கிரய தொகை ரூ.10,000/- ஐ ரிஜிஸ்டர் செய்யும்போது ரிஜிஸ்டர் முன்னிலையில் தொகையை பெற்றுக்கொள்வதாக ஒப்புக்கெள்ளப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் குறிப்பிட்டுள்ளவாறு தொகையை கொடுத்ததாக எந்த ஒரு மேற்குறிப்பும் ஆவணத்தில் இல்லை என்றால் சரியல்ல.மொத்த தொகையையும் பெற்றுக்கொண்டுவிட்டதாக வாசகம் ஆவணத்தில் உள்ளது. நான் கூறுவதுபோல் வாசகம் எதுவும் ஆவணத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோல், கிரய தொகை கொடுக்கப்பட்டுள்ளதா என்ற விவரம் அசல் ஆவணத்தை பார்த்தால் மட்டுமே தெரிந்துகொள்ள முடியும் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கான கிரய ஆவணங்கள் இல்லாததாலும், தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதாலும், வருவாய் ஆவணங்கள் மட்டுமே மூல ஆவணங்களாக இருந்துள்ளது என்றும், அதில் பழனியாண்டி மகன் சந்திரகுமார் பெயரில் பதிவாகியுள்ளது என்பதால் அதற்கான சரியான ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் சொத்தினை ஏமாற்ற வேண்டும் என்ற அடிப்படையில் தாவா சொத்து கிரயம் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>கு.வி தொடர்ச்சி</u>** - வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ signed/
ராஜாசுரேஷ்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி